*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2024** **25 ஏப்ரல், 2025**

**<u>இரங்கல் செய்தி</u>**

இஸ்ரோவின் முன்னாள் தலைவர் கஸ்தூரிரங்கன் வயது மூப்பு மற்றும் உடல் நலக்குறைவு காரணமாக காலமானார் என்ற செய்தி மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது.

1994 முதல் 2003 வரை சுமார் பத்து ஆண்டுகள் இஸ்ரோ தலைவராக பதவி வகித்த அவர், இந்திய விண்வெளி அமைப்பை உலக அரங்கில் உயரச் செய்தவர். அதற்காக பத்ம விபூஷன் விருது பெற்றவர். மாநிலங்களவை உறுப்பினராகவும் பணியாற்றியவர். தொலைநோக்கு பார்வை கொண்ட அவருடைய தன்னலமற்ற சேவை வரலாற்றில் என்றும் நிலைத்து நிற்கும்.

அவரைப் பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள் மற்றும் விஞ்ஞானிகள் அனைவருக்கும் என்னுடைய ஆழ்ந்த இரங்கலையும் வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். அவரது ஆன்மா அமைதி பெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

(K. கைலாஷ்நாதன்)